# மகிழ்ச்சி

**MAGIZHCHI MAGAZINE**

**JANUARY 2026**



## அவருடைய புதிய துவக்கம்


**C.S.I. TAMIL CHURCH SHARJAH**

The United Arab Emirates,

Mob : 0507032150 / website : www.csitamilsharjah.com



For Private Circulation Only

# இதழின் உள்ளே...

| | |
|---|---|
| ஆயர் மடல் | 3 |
| செயலர் மடல் | 8 |
| திருமறைத் தியானம் | 10 |
| His New Beginning | 12 |
| இனிய இல்லறம் | 16 |
| Church History | 20 |
| திருமறையைத் தெரிந்துகொள்வோம் | 24 |
| Kids Corner | 26 |
| Birthday & Wedding Anniversary Celebrants | 28 |
| Daily Bible Reading | 30 |
| வழிபாட்டுத் தியானப் பொருள் | 31 |



# From the Presbyter's Desk

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே,

நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் விலைமதிப்பற்ற திருநாமத்தில் உங்களுக்கு கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

நாம் புதிய ஆண்டிற்குள் (2026) அடிவெடுத்து வைக்கும் இந்த வேளையில், உங்களுக்கும் உங்கள் குடும்பத்தாருக்கும் எனது இதயங்கனிந்த புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். 2026-ஆம் ஆண்டிற்காக, ஜெபத்தோடும் விசுவாசத்தோடும் தேர்ந்தெடுக்கப்பட்ட நமது வாக்குத்தத்த வசனம், ஏசாயா 41:15 லிருந்து:

**“இதோ, நான் உன்னைப் புதியதும் கூர்மையுமான பற்களுள்ள போரடிக்கிற எந்திரமாக்குகிறேன்…”**

இந்த வாக்குத்தத்தமானது, சாத்தியமற்றவைகளை மேற் கொள்வதற்குத் தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வல்லமையளிக்கிறார் என்பதை நமக்கு உறுதிப்படுத்துகிறது. நாம் கீழ்ப்படிதலோடு நடந்து, அவருடைய பலத்தின் மீது நம்பிக்கை வைக்கும்போது, நமக்கு முன்பாக மலையைப் போலத் தெரிபவை அனைத்தும் பதரைப் போலத் தகர்க்கப்படும். இந்த வசனம் நமது திருச்சபையையும், ஒவ்வொரு குடும்பத்தையும் இந்த ஆண்டு முழுவதும் வழிநடத்தி, ஊக்கப்படுத்தி, பலப்படுத்துவதாக.

கடந்த 2025- ஆம் ஆண்டு முழுவதும் நமது திருச்சபை ஊழியங்களிலும், நமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், நாம் அறியாத தருணங்களிலும் தேவன் காட்டிய மாறாத கிருபைக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் நன்றியுள்ள இருதயத்தோடு அவருக்கு ஸ்தோத்திரம் செலுத்துகிறோம். மெய்யாகவே, கர்த்தர் இதுவரை நம்மை நடத்தி வந்திருக்கிறார்.

## டிசம்பர் 2025 நிறைவு மற்றும் கொண்டாட்டங்களின் மாதம்

டிசம்பர் மாதம் நமது கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிறப்பைக் கொண்டாடும் விதமாக, உண்மையாகவே நிறைவும் மகிழ்ச்சியும் நிறைந்த மாதமாக அமைந்தது.

இம்மாதம் டிசம்பர் 1-ஆம் தேதி அதிகாலை 5:00 மணிக்கு நடைபெற்ற ஆன்லைன் வாக்குத்தத்த ஆராதனையுடன் அர்த்தமுள்ளதாகத் தொடங்கியது. அதில், “இம்மானுவேல் தேவன் நம்மோடு இருக்கிறார்” என்பது இம்மாதத்திற்கான வாக்குத்தத்த வசனமாகப் பெறப்பட்டது. தேவன் எல்லா காலங்களிலும் நம்மோடு இருக்கிறார் என்பதை இது நமக்கு நினைவூட்டியது.

டிசம்பர் 6, சனிக்கிழமை அன்று, ஜூனியர் சர்ச் கிறிஸ்துமஸ் நிகழ்ச்சியான “ORIEL - 2025”, “இதயங்கள் இணையட்டும், தேசங்கள் மகிழட்டும் இயேசு பிறந்துள்ளார்” என்ற கருப்பொருளின் கீழ் மகிழ்ச்சியுடன் கொண்டாடப்பட்டது. ஜூனியர் சர்ச்சின் ஒவ்வொரு வகுப்பும் ஒரு நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி, கிறிஸ்துவின் பிறப்புச் செய்தியை அந்தந்த நாடுகளின் மறைப்பணியாளர்களைப் (Missionaries) பற்றிய தகவல்களோடு அழகாக எடுத்துரைத்தனர். 100 க்கும் மேற்பட்ட குழந்தைகள் இதில் பங்கேற்று கிறிஸ்துமஸ் பரிசுகளைப் பெற்றனர்; சுமார் 400 சபை மக்கள் ஒன்று கூடி இந்த ஆசீர்வதிக்கப்பட்ட கொண்டாட்டத்தைக் கண்டு மகிழ்ந்தனர். நம் குழந்தைகளுக்காகவும், அவர்களுக்குப் பயிற்சியளித்த ஆசிரியர்களுக்காகவும் நாம் தேவனைத் துதிக்கிறோம்.

டிசம்பர் 7-ஆம் தேதி, முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று, நாம் திருவிருந்து ஆராதனையைக் கொண்டாடினோம். இதில் நமது 7 குழு ஜெபக் குழுக்களை சார்ந்தவர்களும் (Cell Prayer Groups), பெண்கள் ஐக்கிய சங்கத்தினரும் இணைந்து சிறப்பான கிறிஸ்துமஸ் பாடல்களைப் பாடினர். அனைத்து குழு உறுப்பினர்கள் மற்றும் தலைவர்களின் அர்ப்பணிப்பையும், சிறப்பான ஒருங்கிணைப்பையும் நான் மனதாரப் பாராட்டுகிறேன்.

தொடர்ந்து வந்த வாரங்களில், நமது திருச்சபையினர் மகிழ்ச்சியுடன் கிறிஸ்துமஸ் வீடு சந்திப்பில் (Carol House Visiting) ஈடுபட்டனர். இதில் சுமார் 100 குடும்பங்களைச் சந்தித்து, கிறிஸ்துமஸ் செய்தியையும் புத்தாண்டு வாழ்த்துகளையும் பகிர்ந்து, பல இல்லங்களில் மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் பரப்பினோம்.

டிசம்பர் 14, ஞாயிற்றுக்கிழமை காலை 10:00 மணி முதல் மதியம் 2:00 மணி வரை, அஜ்மானில் உள்ள ஹீலியோ பூங்காவில் (Helio Park) நமது முகாம் சகோதரர்கள் ஐக்கியத்தின் (Camp Brothers' Fellowship) கிறிஸ்துமஸ் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் சகோதரர்கள் விளையாட்டுப் போட்டிகளிலும், ஐக்கிய விருந்திலும் உற்சாகமாகப் பங்கேற்றனர்; அவர்களுக்கு கிறிஸ்துமஸ் பரிசுகள் வழங்கப்பட்டு, கிறிஸ்துவுக்குள் சகோதர உறவு பலப்படுத்தப்பட்டது.

அன்று மாலை, சிறப்பான கிறிஸ்துமஸ் பாடல் ஆராதனையினால் (Carol Service) நாம் ஆசீர்வதிக்கப்பட்டோம். நமது திருச்சபைப் பாடகர் குழுவினர் ஏழு அழகான பாடல்களைப் பாடினர். இதில் நான்கு பாடல்கள் நமது பாடகர் குழுவின் பயிற்றுனர் திரு. சைலேந்தர் வசந்த் குமார் அவர்களால் எழுதி மெட்டமைக்கப்பட்ட புதிய பாடல்கள் என்பது குறிப்பிடத்தக்கது. 2025-ஆம் ஆண்டு முழுவதும் அயராது உழைத்த நமது பாடகர் குழுவின் பயிற்றுனர், பாடகர் குழு உறுப்பினர்கள் மற்றும் இசைக்கலைஞர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு, வரும் ஆண்டுகளிலும் அவர்கள் சிறப்பாகப் பணியாற்ற வாழ்த்துகிறேன்.

மூன்றாவது ஞாயிற்றுக்கிழமை அன்று, நமது குடும்ப கிறிஸ்துமஸ் பாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் 23 குடும்பங்கள் பங்கேற்று சிறப்பு நிகழ்ச்சிகளை வழங்கினர். இது நமது திருச்சபை குடும்பத்தின் ஒற்றுமையையும் மகிழ்ச்சியையும் பிரதிபலித்தது.

நமது கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு இரவு ஆராதனைகள் (Watch Night Service), நம்மை மீண்டும் இறைக்கரத்தில் ஒப்படைக்கும் ஆசீர்வாதமான வழிபாடாக, நன்றி மற்றும் அர்ப்பணிப்பின் தருணங்களாக அமைந்தன.

## நன்றிகளும் அங்கீகாரமும்

ஒரு திருச்சபை குடும்பமாக, 2025-ஆம் ஆண்டு முழுவதும் நம்மை வழிநடத்திய தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். அத்துடன், இந்த ஆண்டு முழுவதும் அர்ப்பணிப்போடு பணியாற்றிய :

- திருச்சபை கமிட்டியின் செயலாளர்
- திருச்சபை கமிட்டியின் பொருளாளர்
- மற்றும் அனைத்து கமிட்டி உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேலும், திரைக்குப் பின்னால் விசுவாசத்துடன் பணியாற்றும் பின்வருபவர்களையும் நான் நன்றியுடன் நினைவுகூர்கிறேன்:

- திரு.ராபர்ட் பொன்சிங் சபை உபதேசியார் (Catechist)
- திரு.ஜோஸ் மற்றும் திரு. மோகன்தாஸ் முகாம் சகோதரர்கள் ஐக்கிய தன்னார்வலர்கள்.
- திரு.சதீஷ் குமார் 'மகிழ்ச்சி' இதழின் ஆசிரியர்
- நமது ஒலி ஒளி (AV) தன்னார்வலர்கள் திரு.ராஜன், திரு.அனிஷ், திரு.ஷாலோம் சிலம்பரசன் மற்றும் திரு. சாம் மெர்வின்.
- நமது PPT குழுவினர் திரு. சரவணன் மற்றும் திருமதி பெனில்
- கேமரா மற்றும் பதிவு குழுவினர் திரு.பிராங்க்ளின் மற்றும் திரு.ஜெரோம்
- நமது 7 பேருந்து ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் திருச்சபைக்காக அயராது உழைக்கும் அனைத்து தன்னார்வலர்கள்

தேவன் உங்கள் ஒவ்வொருவருக்கும் ஏற்ற பலனை அளிப்பாராக.

## 2026-ஆம் ஆண்டிற்கான தரிசனம் 'நம் கதையில் அவர் சரிதம்' (HIS Story in Our Story)

தேவன் இந்தப்புதிய ஆண்டில் நமக்கு 12 மாதங்களை கிருபையாக வழங்கியுள்ளார். நமது பயணம் அவருடைய தெய்வீக வழிநடத்துதலின் கீழ் 'நம் கதையில் அவர் சரிதம்' என்ற கருப்பொருளைக் கொண்டு அமையும்.

ஜனவரி மாதத்திற்கான கருப்பொருள்: 'அவரது தொடக்கம் புதிய ஆண்டு, புதிய மாதம், புதிய ஆரம்பம்: தேவனின் கைகளில் ஒரு புதிய கருவியாக மாறுதல்.'

இந்த ஆண்டின் தவக்காலத்தில் (Lent Season), சென்னை பேராயத்தின் பேராயர் பேரருட்பணி. ஏ.பால் பிரான்சிஸ் ரவிசந்திரன் அவர்கள் நமது திருச்சபைக்கு வருகை தர உள்ளனர். அவர்கள் நமது சிறப்பு கன்வென்ஷன் கூட்டத்தில் இறைவார்த்தையை பகிர்ந்து நமது குழந்தைகளுக்கு திடப்படுத்தல் வழிபாட்டையும் (Confirmation) நிறைவேற்றுவார்கள்.

இதன்படி, திடப்படுத்தல் வகுப்புகள் ஜனவரி முதல் ஞாயிற்றுக்கிழமை முதல் தொடங்கும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் ஆராதனைக்குப் பிறகு இரவு 7.30 மணி முதல் 8:00 மணி வரை வகுப்புகள் நடைபெறும். பிள்ளைகள் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். தற்போது வரை 32 குழந்தைகள் பதிவு செய்துள்ளனர்.

இந்த ஆண்டு முதல், நமது மருத்துவப் பணி (Medical Mission) மீண்டும் தொடங்கப்படும் மற்றும் ஞாயிறு ஆராதனைக்குப் பிறகு மருத்துவ முகாம் ஏற்பாடு செய்யப்படும். கூடுதலாக, நமது ஆண்களிடையே பலமான ஆவிக்குரிய வளர்ச்சியையும் ஐக்கியத்தையும் தேடும் நோக்கில், ஆண்கள் ஐக்கிய சங்கத்தை மீண்டும் தொடங்க ஜெபத்தோடு திட்டமிட்டு வருகிறோம்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, என்னையும், என் குடும்பத்தையும், நமது திருச்சபையையும் உங்கள் அன்றாட ஜெபங்களில் தாங்குங்கள். நாங்களும் உங்களை இடைவிடாமல் எங்கள் ஜெபங்களில் நினைவுகூர்கிறோம்.

இறைபணியில் உங்கள் ஆயர்
அருள்திரு. A.F. ஆமோஸ் இலாசரஸ்
☎ +971 50 703 2150
e-mail : tamilchurchcsisharjah@gmail.com



# செயலர் மடல்

கிறிஸ்துவுக்குள் பிரியமானவர்களே, ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் ஈடு இணையற்ற நாமத்தில், உங்கள் அனைவருக்கும், அன்பின் வாழ்த்துதலை, தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த வருடம் முழுவதும், நம்மையும் நம் குடும்பத்தினரையும், பாதுகாத்து, இந்த புதிய வருடத்தையும் காண கிருபை செய்ததற்காக, ஆண்டவருக்கு நன்றிகளையும், துதிகளையும் ஏறெடுக்கிறோம்.

கடந்த டிசம்பர் மாதத்தில் நமது சபையின் கிறிஸ்து பிறப்பின் பண்டிகையின் கொண்டாட்டங்களை (Carol Rounds, Carol services - Choir, Families & Prayer cell groups, Junior Church program, Brother's meet at Ajman, Christmas-Divine service & New year service) நாம் ஒரு குடும்பமாக சிறப்பாக கொண்டாட கிருபை செய்த ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவுக்கு நன்றிகளை ஏறெடுக்கிறோம். இதற்காக உழைத்த கொடுத்த நமது சபையின் குடும்பங்கள், தன்னார்வலர்கள், தனி நபர்கள், எல்லோருக்கும் எங்கள் இதயம் கனிந்த, நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். குறிப்பாக, நமது ஆயர் அருட்பணி ஆ.எப்.ஆமோஸ் லாசரஸ் அவர்கள் மற்றும் ஆயரம்மா. Dr.கேத்தரின் ஆமோஸ் அவர்களும் எங்களோடு எல்லா நேரத்திலும் இணைந்து எங்களுக்கு உற்சாகத்தை கொடுத்து சபையரை சந்திக்கவும், எல்லா நிகழ்வுகளிலும், இணைந்து செயல்பட்டதற்காக நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

கடந்த வருடம் முழுவதும் நமது சபையின் நிகழ்வுகள் அனைத்தையும், நேர்த்தியும் கிரமமுமாக நடத்த கிருபை செய்த ஆண்டவருக்கு நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம். குறிப்பாக, கடந்த வருடத்தின் முதல் பகுதியில், சபையின் காரியங்களை சிறப்பாக நடத்தி, தனது மூன்று வருட பணிக்காலத்தை

சிறப்பாக முடித்து சென்ற. நமது ஆயர். அருட்பணி. J.ஜான் ஜெபலின் ஜோஸ் ஐயா அவர்களுக்கும், அவர்களோடு இணைந்து சிறப்பாக பணிபுரிந்த கீழ்க்கண்ட செயற்குழு கமிட்டி அங்கங்களான, Bro. Stephen Gunasekar (Secretary), Bro. Solomon Raj Kumar(Treasurer), Bro. Ashok Kumar, Bro.Jesudasan, Bro.Shylander vasanthakumar, Bro.Sujin, Bro. Saravanakumar ஆகியோருக்கும் நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.

அதேபோல் கடந்த ஜூன் 22, 2025 முதல் நம்மோடு இணைந்து, தேவ பணியை சிறப்பாக நடத்தி வரும், நமது ஆயர் அருட்பணி. A.F.ஆமோஸ் லாசரஸ் ஐயா, ஆயரம்மா. Dr.கேத்தரின் ஆமோஸ், மற்றும் அவர்களோடு இணைந்து நமது சபையின் பல்வேறு ஊழியங்களை சிறப்பாக நடத்தி வரும், தன்னார்வலர்கள் மற்றும் பொறுப்பாளர்களான முறையை, நமது சபை ஊழியர், Junior Church - Director மற்றும் ஆசிரியர்கள், பெண்கள் ஐக்கிய சங்க நிர்வாகிகள், பாடகர் குழு பயிற்றுனர், பாடகர் குழுவினர், இசை வல்லுனர்கள், மருத்துவர்கள், செவிலியர்கள், மகிழ்ச்சி புத்தக ஆசிரியர், பேருந்து ஒருங்கிணைப்பாளர்கள், செல் பிரேயர் குரூப் லீடர்ஸ், ஒலி மற்றும் ஒளி வல்லுநர்கள், தன்னார்வலர்களாக வாகனம் செலுத்தியவர்கள், ஆலய பணிவிடைகளில் உதவுபவர்கள், சிற்றுண்டி மற்றும் தேநீர் விநியோகத்தில் உதவுபவர்கள், PPT தயாரித்தல், சமூக ஊடகங்களில் புதுப்பிப்புகள் (Social Media updates) செய்வது, மற்றும் கூட்டங்களை அறிவிக்கும் போஸ்டர்கள் உருவாக்க உதவுதல், போன்ற சேவைகளை செய்து வரும் அனைத்து தன்னார்வலர்களுக்கும், நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். கர்த்தர் தாமே உங்களை தொடர்ந்து ஆசிர்வதிப்பாராக. வருகிற ஆண்டிலும் உங்களது இந்த ஊழிய சேவையை தொடர அன்போடு கேட்டுக்கொள்கிறோம்.



# அவருடைய புதிய துவக்கம்

‘இதோ, போரடிக்கிறதற்கு நான் உன்னைப் புதிதும் கூர்மையுமான பற்களுள்ள யந்தரமாக்குகிறேன்; நீ மலைகளை மிதித்து நொறுக்கி, குன்றுகளைப் பதருக்கு ஒப்பாக்கிவிடுவாய்.’ ஏசாயா 41:15

## ‘நம் கதையில் அவர் சரிதம்’ (HIS Story in Our Story)

இந்த புத்தாண்டின் பன்னிரண்டு மாதங்கள், வெறும் வெற்றுப் பக்கங்கள் அல்ல தேவன் கிருபையாய் நமக்குத் தந்த பரிசு! நம் வாழ்வின் வரிகளில் அவர் தமது திருக்கதையை எழுதும் புனிதமான தாள்கள் இவை.

நாம் தனியாகப் பயணிக்கவில்லை, அவருடைய வழிநடத்துதலின் நிழலிலும், அவருடைய காலநேரத்தின் நேர்த்தியிலும், அவருடைய மாறாத கரங்களின் பிடியிலும் ஒரு குடும்பமாய் நடைபயில்கிறோம்.

‘நம் கதையில் அவர் சரிதம்’ தனித்து விடப்பட்ட துண்டல்ல நம் வாழ்க்கை, படைப்பு, மீட்பு, புதுப்பித்தல் எனும் தேவனின் மகா காவியத்தோடு பின்னப்பட்ட இழை! நம் பாதையை அவர் சித்தத்தோடு இணைக்கும்போது, சாதாரண நாட்களும் சந்நிதானமாய் மாறும், அவர் மகிமை அங்கே மலரும்!

இந்த ஜனவரி மாற்றத்தின் வாசல், ‘அவருடைய தொடக்கம்’ இங்கிருந்து தான். காலண்டர் காட்டும் மாற்றம் மட்டுமல்ல இது, கடவுள் விடுக்கும் தெய்வீக

அழைப்பு! நேற்றைய தோல்வியின் பாரங்களை இறக்கி வைத்துவிட்டு, அவர் தரும் புதுமையை விசுவாசத்தோடு ஏந்துவோம்.

இந்த ஆரம்பம் நம் சுயபலத்தால் வருவதல்ல, நம்மைப் புதிய கருவியாக்குவேன் என்ற அவர் வாக்குறுதியின் ஊற்று (ஏசாயா 41:15). அவர் வெறும் வாய்ப்பைத் தருவதில்லை, நம்மைச் செதுக்கி, கூர்மையாக்கி, தமது நோக்கத்திற்காகத் தகுதிப்படுத்துகிறார். அவருடைய தொடக்கம், நம் வாழ்வில் அதிசயங்களை நிகழ்த்தும் உயிருள்ள சாட்சியாகட்டும்!

நாம் 2026 -ஆம் ஆண்டிற்குள் நுழையும்போது, தேவன் புதுப்பித்தல் மற்றும் அதிகாரப்படுத்துதல் குறித்த ஒரு வாக்குறுதியை வழங்குகிறார். ஏசாயா 41:15 ஒரு தெளிவான வாக்குறுதியை முன்வைக்கிறது: தேவன் தம்முடைய மக்களைத் தடைகளை முறியடிக்கவும், தம்முடைய நோக்கங்களை நிறைவேற்றவும் கூடிய கருவிகளாக மாற்றுவார். இது வெறும் செயலுக்கான அழைப்பு மட்டுமல்ல; இது அவருடைய இறையாண்மை மற்றும் கிருபையில் வேரூன்றிய புதிய தொடக்கங்களின் தெய்வீக அறிவிப்பாகும்.

‘தேவன் நம்மைத் தயார் செய்கிறார், கூர்மையாக்குகிறார் மற்றும் அவருடைய நோக்கங்களை நிறைவேற்ற நமக்கு அதிகாரம் அளிக்கிறார்.’

‘போரடிக்கும் கருவி’ என்பது ஆயத்தப்படுத்துதல், சுத்திகரித்தல் மற்றும் செயல்திறனைக் குறிக்கிறது. ஒரு கருவி தானியத்திலிருந்து பதரைப் பிரிப்பது போல, வாழ்க்கையின் சவால்களைப் பகுத்தறியவும், சகித்துக்கொள்ளவும், அவற்றின் மீது வெற்றி கொள்ளவும் தேவன் தம் மக்களை ஆயத்தப்படுத்துகிறார். நாம் அவருடைய சித்தத்தோடு இசைந்திருக்கும்போது, நம் பாதையில் உள்ள ஒவ்வொரு ‘மலையும்’ அல்லது ‘குன்றும்’ அவருடைய வல்லமைக்குக் கீழ்ப்பட்டதே.

## தேவனுடைய மாற்றும் வல்லமை

தேவன் சூழ்நிலைகளை மட்டும் சரிசெய்வதில்லை; அவர் நம்மை உள்ளிருந்து மாற்றுகிறார். ‘புதியதும் கூர்மையுள்ளதுமான’ கருவியாக மாற்றப்படுவது என்பது ஆவிக்குரிய புதுப்பித்தல் குறிக்கிறது.

‘புதிய படைப்பு: இந்த ‘புதுமை’ என்பது கிறிஸ்துவுக்குள் ஒரு புதிய படைப்பாக இருக்கும் பவுலின் போதனையைப் பிரதிபலிக்கிறது (2 கொரிந்தியர் 5:17).

‘பயன்பாடு: கடந்த கால தோல்விகளையும் ஏமாற்றங்களையும் தேவனிடம்

ஒப்படையுங்கள். 2026ன் வாய்ப்புகளுக்காக உங்களை வடிவமைக்கவும் ஆயத்தப்படுத்தவும் அவருக்கு இடமளியுங்கள்.

## தடைகளை முறியடித்தல் : மலைகளைப் போரடித்தல்

வேதாகமத்தில் மலைகள் பெரும்பாலும் கடக்க முடியாத தடைகள், ஆழமாக வேரூன்றிய பாவம் அல்லது ஆவிக்குரிய எதிர்ப்பைக் குறிக்கின்றன. அவற்றைப் போரடிப்பது என்பது அவற்றைத் தூளாக்கி பதராக மாற்றுவதாகும்.

‘தெய்வீக அதிகாரம்: இது படைப்பு மற்றும் மனித சூழ்நிலைகளின் மீது தேவனுக்குள்ள அதிகாரத்தைப் பிரதிபலிக்கிறது. தேவன் செங்கடலைப் பிளந்து எரிகோ மதில்களை வீழ்த்தியது போல, சாத்தியமற்றவற்றை முறியடிக்க அவர் தம் மக்களைத் தயார் செய்கிறார்.

‘பயன்பாடு: உங்கள் வாழ்க்கையில் உள்ள ‘மலைகளை’ அடையாளம் காணுங்கள், அவற்றை முறியடிக்கத் தேவன் உங்களைத் தகுதியாக்குவார் என்று நம்புங்கள். விசுவாசம் என்பது தேவனுடைய வல்லமையின் மீது கொண்டுள்ள செயல்மிக்க நம்பிக்கையாகும்.

## பனியில் உதிக்கும் பீனிக்ஸ் (The Phoenix in the Snow)

அடர்ந்த பனியால் சூழப்பட்ட ஒரு காட்டை கற்பனை செய்து பாருங்கள். வாழ்க்கை ஸ்தம்பித்தது போலவும், கிளைகள் பனியால் பாரமடைந்தும், வளர்ச்சி நின்றுவிட்டது போலவும் தோன்றும். இருப்பினும், கடந்த ஆண்டின் சாம்பலிலிருந்து ஒரு பீனிக்ஸ் பறவை எழுந்து, தன் பாதையில் உள்ள பனியை உருக்கும் ஒரு நெருப்பை மூட்டி, அதற்குக் கீழே இருக்கும் பசுமையான துளிர்களை வெளிப்படுத்துகிறது.

பீனிக்ஸ் நெருப்பிலிருந்து தப்பிப்பதில்லைஅது நெருப்பின் மூலமாகவே மறுபிறப்பு எடுத்து, வலிமையுடனும், பொலிவுடனும் புதிய வாழ்விற்குத் தயாராகிறது. அதேபோல், நமக்குள் இருக்கும் தேவனுடைய கிரியை சவால்கள் மூலம் நம்மைச் சுத்திகரிக்கும் ஒரு செயல்முறையாகும். பயம், சந்தேகம் மற்றும் வரம்புகள் என்ற மலைகள் அசையாதவை அல்ல; நமக்குள் அவர் விதைத்துள்ள திறனை வெளிக்கொணரவும், மலைகளைப் போரடிக்கவும் அவருடைய ஆவியானவர் நம்மைத் தகுதியாக்குகிறார்.

‘எழுகின்ற பீனிக்ஸ் பறவையைப் போல, நாம் கிறிஸ்துவுக்குள் மறுபடி பிறந்து, நமக்கு முன்பாக இருக்கும் மலைகளைப் போரடிக்கத் தயாராக இருக்கிறோம்.’

## அவருடைய புதிய தொடக்கத்தில் வாழ்வது

தேவனுடைய வாக்குறுதி இருமடங்கானது: அவர் கருவிகளை வழங்குகிறார் மற்றும் அவருடைய சித்தத்தை நிறைவேற்ற அந்த கருவியாகிய நமக்கு அதிகாரம் அளிக்கிறார்.

1. கிறிஸ்துவுக்குள் அடையாளம்: ‘புதியதும் கூர்மையுமான’ கருவி என்பது நமக்குள் இருக்கும் தேவனுடைய கிரியை (பிலிப்பியர் 2:13).

2. நோக்கமும் பணியும்: தனிப்பட்ட வாழ்க்கை, சமூகம் மற்றும் ஊழியத்தில் ஆவிக்குரிய மலைகளைப் போரடிக்க நாம் அழைக்கப்பட்டுள்ளோம்.

3. ஆவிக்குரிய வளர்ச்சி: புதுப்பித்தலுக்குத் திட்டமிட்ட முயற்சி தேவை ஜெபம், வேத தியானம், ஆராதனை மற்றும் கீழ்ப்படிதல் ஆகியவை போரடிக்கும் கருவியின் பற்களைப் போல நம்மைச் சுத்திகரிக்கின்றன.

## தியானக்க சில கேள்விகள் :

‘இந்த ஆண்டு தேவனுடைய வல்லமையால் போரடிக்கப்பட வேண்டிய ‘மலைகள்’ உங்கள் வாழ்க்கையில் எவை?

‘பயமோ அல்லது கசப்போ இன்றி தேவன் உங்களைச் சுத்திகரிக்கும் (கூர்மையாக்கும்) செயல்முறையை நீங்கள் எப்படி ஏற்றுக்கொள்வீர்கள்?

## நிறைவாக

ஏசாயா 41:15 என்பது நம்பிக்கை மற்றும் அதிகாரமளிக்கும் வார்த்தையாகும். நாம் 2026ல் நுழையும்போது, எந்தத் தடையும் மிகப் பெரியதல்ல என்பதை நினைவில் கொள்வோம். தேவன் நம்மைத் தயார் செய்கிறார், கூர்மையாக்குகிறார் மற்றும் அவருடைய நோக்கங்களை நிறைவேற்ற நமக்கு அதிகாரம் அளிக்கிறார்.

பனியில் இருந்து எழும் பீனிக்ஸ் போல, நாம் கிறிஸ்துவுக்குள் மறுபிறப்பு பெற்று, மலைகளைத் தகர்க்கத் தயாராக இருக்கிறோம். இந்த ஆண்டு தேவனுடைய வல்லமை, உண்மைத்தன்மை மற்றும் நம் வாழ்வில் அவர் தரும் புதிய தொடக்கங்களின் சாட்சியாக அமையட்டும். ஆமென்.

இறைப்பணியில்
உங்கள் ஆயர்.



# His New Beginning

God Is the Author of New Beginnings throughout Scripture, God reveals Himself as the One who brings life out of death hope out of despair and purpose out of brokenness. A “new beginning” is not merely a fresh chapter it is a divine intervention where God rewrites a story with His grace power and promise.

Whether it is the beginning of a new year, a new season, or a new spiritual journey, the Bible consistently shows that God specializes in starting things over.

**Creation :** The First Beginning: “In the beginning, God created” (Genesis 1:1). The Bible opens with God bringing order out of disorder. This sets the tone for every new beginning that follows God steps into darkness and speaks light.

**Noah :** A New Beginning After Judgment After the flood, God gave humanity a second chance. The rainbow became a symbol of His promise that mercy triumphs over judgment.

**Abraham:** A New Beginning through Obedience God called Abraham out of his homeland into a future he could not yet see. Every new beginning requires trust

**Jesus:** The Ultimate New Beginning: The Cross and Resurrection Through Jesus, God didn’t just repair humanity He recreated it. “Therefore, if anyone is in Christ, he is a new creation” (2 Corinthians 5:17). The resurrection is the greatest new beginning in history. It proves that nothing sin, shame, or death can stop God’s plan for renewal.

## Your New Beginning : God's Promise for Today

When God Begins again, He Transforms: Every new beginning in Scripture is marked not only by a change in circumstances but by a change in the person God is raising up. God does not simply open a new chapter He reshapes His people so they can walk into it with strength authority, and purpose.

Isaiah 41:15 captures this truth: Behold; I will make you into a new threshing sledge with sharp teeth;

You shall thresh the mountains and beat them small, and make the hills like chaff."

It is a divine announcement of transformation. It is God declaring: "I am giving you a new beginning by making you into something new."

**How to Step into Your New Beginning**

1. Surrender the Old: You cannot carry old burdens into a new season. Release bitterness, fear, and regret.

2. Stand on God's Word: Every new beginning is anchored in a promise.

3. Walk by Faith, Not Sight: New beginnings rarely look complete at first. Trust the process God finishes what He starts.

4. Stay Connected to God's People: New beginnings flourish in community. God often uses others to confirm, strengthen, and guide your steps.

His New Beginning Is already in Motion a new beginning is not something you earn it is something God gives. He is the God who restores, renews, and resurrects. Whatever "His" new beginning refers to your life, your family, your ministry, or someone you're praying for God is already at work.

The same God who spoke light into darkness is speaking over this new season. And when God begins a thing, nothing can stop it.

Contributed by
Mrs.Nancy Augustine



# வாலிபர்களுக்குச் சில ஆலோசனைகள்

**கர்த்தராகிய ஆண்டவரே, நீரே என் நோக்கமும், என் சிறு வயது தொடங்கி என் நம்பிக்கையுமாயிருக்கிறீர்.** (சங்கீதம் 71:5).

நான் இன்றைய இளைஞர்களைப் பார்த்து இருவேறு உணர்ச்சிகளை அடைகிறேன். இன்றைய இளைஞர்களின்மேல் பொறாமைப் படுகிறேன்; அதே வேளையில் இன்றைய இளைஞர்களைப் பார்த்து ஆதங்கப்படுகிறேன் (I envy the present generation; at the same time, I pity them).

இன்றையத் தலைமுறையில் வாழும் இளைஞர்கள் முன்னேறுவதற்குக் கிடைத்திருக்கிற வாய்ப்புவசதிகள் கடந்த தலைமுறை யினர்களுக்கு இல்லை. அதே வேளையில், இன்றைய இளைஞர்கள் கெட்டு அழிந்து போவதற்கு இன்றுள்ள ஏதுக்களும் கடந்த தலைமுறை இளைஞர்களுக்கு இல்லை.

'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' என்றும், என்றும் கூறுவார்கள். வருங்கால வாழ்க்கைக்கு ஒவ்வொருவரும் தங்களை இளமையிலேயே தயார்ப்படுத்திக்கொள்ள வேண்டும்.

ஆங்கில எழுத்தாளர் செஸ்டர்பீல்டு பிரபு. 'இளைமையில் அறிவை உள்ளத்தில் ஊன்றாவிட்டால், முதுமையில் நிழலின்றித் தவிக்க நேரிடும்' என்று கூறுகிறார். (If we do not plant knowledge when young, it will give us no shade when we are old. Lord Chesterfield).

## I.முன்னேற வாய்ப்பு வசதிகள்

### 1. பிள்ளைகள் முன்னேற்றத்தில் பெற்றோர்களின் அக்கறை (Parental Care)

- இன்றையப் பெற்றோர்கள் பலர் படித்தவர்களாக இருக் கிறார்கள்;
- படிப்பைக் குறித்துப் பிள்ளைகளிடம் கலந்துரையாடு கிறார்கள். அவர்களுடைய படிப்பைக் கண்காணிக்கிறார்கள்; பிள்ளைகளுக்கு ஆலோசனை கூறுகிறார்கள்.
- பிள்ளைகளுடைய படிப்பிற்கும் முன்னேற்றத்திற்கும், பொழுதுபோக்கிற்கும் பணம் செலவழிக்க ஆயத்தமாக இருக்கிறார்கள்; பிள்ளைகளுடன் நேரத்தைச் செலவிடு கிறார்கள். பிள்ளகளுடைய ஆரோக்கியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கிறார்கள்.
- முந்தையச் சந்ததியில், தந்தை தனது மனைவியிடமும் பிள்ளைகளிடமும் நேரத்தைப் பகிர்ந்துகொள்ளுவதும் பேசுவதும் அரிது; பெரும்பாலும் குடும்பத் தலைவர்களை வீட்டிலேயே பார்க்கமுடியாது. இன்றையச் சமுதாய மாற்றங்களால், எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து குடும்பமாக வெளியே (Outings and Tours) செல்கிறார்கள்; வீட்டிலும் கலந்து உரையாடுகிறார்கள், ஒருவருக்கொருவர் கருத்துப் பரிமாற்றம் செய்துகொள்ளுகிறார்கள்

### 2. அரசாங்கத்தின் கவனிப்பு (Governmental Care)

- இன்றைய நாட்களில் ஏராளமான பள்ளிகள் திறக்கப் பட்டுள்ளன. கிராமங்களில்கூடக் கல்லூரிகள் திறக்கப் பட்டுள்ளன. பொறியல் கல்லூரிகள் தமிழ்நாட்டில்தான் அதிகமாக இருக்கின்றன. தாராளமான அரசாங்க உதவித் தொகைகள், கட்டாயக் கல்விச் சட்டம் (Compulsory Education). சத்துணவு (Mid-day meals). ‘குழந்தைத் தொழிலாளர்கள் தடைச் சட்டம்’ போன்றவைகள் இன்றைய இளைஞர்கள் முன்னேறச் சாதகமான சூழ்நிலைகளை உருவாக்கியுள்ளன.
- பெற்றோர்களுக்குப் பணவசதியில்லையென்றால், கல்விக் கடன் வழங்குவதற்கு வங்கிகள் தயாராகவுள்ளன (Bank Loans for Education).

### 3. திருச்சபையின் கவனிப்பு (Church Care)

கிறிஸ்தவ ஆலயங்களில் ஓய்வுநாள் பாடசாலை, வேதபாட வகுப்புகள். வாலிபர் முகாம்கள், ஆண்கள் ஐக்கியம், பெண்கள் ஐக்கியம், பாடகர்கள் (Choir), பத்திரிக்கைகள் (Christian istian Magazines), கோடைக் கால விடுமுறைப் பள்ளிகள் போன்றவைகளினால் பிள்ளைகளின் ஆவிக்குரிய வளர்ச்சியில் திருச்சபை கவனம் செலுத்துகிறது செலுத்த வேண்டும்.

### 4. காலத்தினால் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் (Natural Progress in the Passage of Time)

- எண்ணற்ற ஆங்கில மற்றும் தமிழ்ப் பத்திரிக்கைகள், வாராந்திர மாதாந்திரப் பத்திரிக்கைகள் வானொலிச் செய்திகள், தொலைக்காட்சிச் செய்திகள் போன்றவைகள் அறிவை வளர்த்துக் கொள்ள அனுசரணையாக இருக்கின்றன.
- தினமும் சென்று படிக்க வசதியாகப் போக்குவரத்தில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. கிராமங்களிலும் பேருந்து வசதிகள். நல்ல சாலை வசதிகள், மின்சார வசதிகள் உள்ளன.

## II. பின்னேறச் செய்யும் அபாயங்கள் ஆபத்துக்கள்

இன்றைய இளைஞர்கள் கவனத்துடன் வாழ்க்கையை வாழவேண்டிய கட்டாயத்தில் இருக்கிறார்கள். அவர்களைத் தடம் புரளச் செய்யும் சோதனைகளும், மயக்கங்களும் என்னை மலைக்கச் செய்கின்றன. இன்றைய அறிவியலின் முன்னேற்றங்களும், அதன் பயன்பாடுகளும் ஆக்கத்தைவிட, அழிவிற்கே அதிகச் சாதகமாக அமைந்திருக்கின்றன. அறிவியலினால் விளைந்துள்ள தீமைகளே அதிவேகமாக மானிட வர்க்கத்தின் நடைமுறைகளை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. வக்கிர சிந்தனைகளையும், செயல்களையும் கொண்ட மனிதர்கள் நம்மிடையே பெருகிக் கொண்டிருக்கிறார்கள்.

வீட்டிற்கு வெளியேதான் பிள்ளைகள் கெட்டுப்போகக்கூடிய சூழல் உள்ளதென்றும், வீட்டிற்கு வெளியே சென்றால்தான் பிள்ளைகளுக்கு ஆபத்து இருக்கிறது என்றும் கருதிய ஒரு காலம் இருந்தது. ஆனால்

இன்றைய நிலைமை வேறாக இருக்கிறது. ஒரே வார்த்தையில் கூறுவதாக இருந்தால்: இன்றையப் பிள்ளைகள் வீட்டைவிட்டு வெளியேறாமலேயே கெட்டுப் போகலாம்.

## 11. தொலைக்காட்சிப் பெட்டி (Television)

இன்று தொலைக்காட்சிப் பெட்டி இல்லாத வீடே இல்லை என்று கூறலாம். எல்லா வீடுகளிலும், மாநில அரசின் தேர்தல் வாக்குறுதியின்படி, இலவச வண்ணத் தொலைக்காட்சி பெட்டிகள் வந்துவிட்டன.

இந்நாட்களில் உணவுக்குச் செலவிடுவதுபோலவே பொழுது போக்கிற்கும் செலவழிக்க மக்கள் தயாராக இருக்கிறார்கள். இன்று TV, வாழ்க்கையின் ஒரு அம்சமாக, அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக இருக்கிறது. அதற்குக் கொடுக்கப்பட்டுள்ள மிகவும் பிரபலமான பெயர்: Idiot Box. நான் இதற்குக் கொடுக்கும் பெயர் : Devil in the Drawing Room. வரவேற்பறையில் பிரதானமாக அமர்ந்திருக்கும் பிசாசு. இப்படிக் கூறுவதால், நான் தொலைக்காட்சிப் பெட்டிக்கு விரோதியல்ல.

தொலைக்காட்சிப் பெட்டியை தூதனாக்குவதும், பிசாசாக்குவதும் வீட்டில் அதைப் பயன்படுத்துவோர்களின் கரங்களிலிருக்கிறது. நேரங்காலமில்லாமல், வேலை வெட்டியில்லாமல் 'மெகா சீரியல்'களைப் பார்த்துக்கொண்டே காலத்தை வீணாக்கிக் கடமைகளில் கவலையீனமாக இருக்கச் செய்யுமளவிற்கு TV உங்கள் வாழ்க்கையில் இடம் பிடித்திருக்குமானால் அது பிசாசன்றி வேறென்ன?

தொலைக்காட்சிப் பெட்டியை அளவோடு பயன்படுத்துங்கள் முறையாகப் பயன்படுத்துங்கள் நல்லவைகளுக்காகப் பயன்படுத்துங்கள் அறிவு வளர்ச்சிக்காகப் பயன்படுத்துங்கள். அப்பொழுது உங்கள் வீட்டில் அது தேவதூதனாக இருக்கும்.



# சபை மிஷனெரி சங்கம் (C.M.S)

## ரேனியஸ் - சாதி வேறுபாடுகளின் எதிரி

தொடக்கக் கால முதலே மிஷனெரிமாரில் பலரும் சாதி வேறுபாடுகளைத் திருச்சபையிலும் ஏற்றுக்கொண்டனர். கீழ்ச்சாதி மக்களும், மேல்சாதி மக்களும் தனித்தனியே பிரிந்து ஆலயங்களில் அமர்ந்தனர். மேல்சாதிக் கிறிஸ்தவர்கள் திருவிருந்து பெற்ற பின்னரே, கீழ்ச்சாதி மக்கள் திருவிருந்தில் பங்கேற்க அழைக்கப்பட்டனர். பள்ளிகளிலும் “சாதி” சிறுவர்களும் “ஆதி” சிறுவர்களும் தனித்தனி இடங்களில் அமர்த்தப்பட்டனர். இது தவறென ரேனியஸ் உணர்ந்தார். உயர்குலத்தவர், தாழ்குலத்தவர் என்னும் பிரிவினைகளை ஏற்றுக் கொள்வோர் கிறிஸ்தவ அன்பையும், தாழ்மையையும் எங்ஙனம் கற்பிக்கக்கூடுமெனச் சாடினார். அவர் சென்னையில் தொடங்கிய பள்ளிகளில் சாதி வேறுபாடுகளை அகற்ற முயன்றார். அனைவரையும் சமமாக நடத்தினார். பஞ்சமர் பிள்ளைகளைப் பள்ளியில் சேர்த்துக் கொண்டபோது உயர்குலத்து மாணவர்கள் அநேகர் பள்ளியிலிருந்து விலகிக் கொண்டனர். ரேனியஸ் தமது முடிவை மாற்றிக் கொள்ள இசையவில்லை.

பின்னர் பாளையங்கோட்டையிலும் இதே இடர்ப்பாடுதான் ஏற்பட்டது. ஆசிரியர்கட்கும், கிராம ஊழியர்கட்கும் பயிற்சியளிக்க வேதபாடசாலை ஒன்றைத் தொடங்கினார். பல்வேறு சாதியைச் சேர்ந்த பிள்ளைகளும், பஞ்சமர் பிள்ளைகளும் வேறுபாடின்றி ஒன்றித்து இருக்க வேண்டுமென விரும்பினார். ஆனால் அவர்களோ அனைவரும் ஒன்றாயமர்ந்து உணவு உட்கொள்ள மறுத்தனர். ரேனியஸ் கொள்கை வீரர் அல்லவா? அவர் பள்ளியையே மூடிவிட்டார். மாணவர்கள் அனைவரும் ஒரே பந்தியிலமர்ந்து

உணவு உட்கொள்ள ஒப்புதல் அளித்த பிறகே, வேத பாடசாலையை மீண்டும் திறந்தார்.

இந்துக்களிடையே காணப்படும் சாதி வேறுபாடுகளைக் காட்டிலும், அது கிறிஸ்தவர்களிடையே மிகுந்து காணப்படுவதைக் கண்டார். மனம் நொந்தார். இந்நிலை தொடர்ந்தால், "கிறிஸ்தவர்கள் ஒருவரிலொருவர் அன்புகூருகிறார்கள்" என்று இந்துக்கள் எவ்வாறு சொல்ல முடியும்? என்று மிகுந்த வேதனையடைந்தார். எனவே திருச்சபையில் வேரூன்றியிருந்த சாதி வேறுபாடுகளை அகற்ற அரும்பாடுபட்டார்.

## ரேனியஸ் - பயணி

சென்னையில் தொடங்கிய பள்ளிகளின் வளர்ச்சிக்காக ஈராண்டுக் காலமாகக் கடுமையாக ரேனியஸ் உழைத்தார். 1817- ல் சென்னையில் சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களில் தம் பணியை விரிவடையச் செய்தார். அப்பணிகளில் நடைபெற்றவற்றை என்னென்று குறிப்பிடுவது! ஒரு சமயம் சென்னைக்கு வடக்கேயுள்ள ஒரு கிராமத்துக்குச் சென்றார். அங்குள்ள சிறுவர்கள், ஐரோப்பியரை அதுவரை கண்டதேயில்லை. ரேனியசைப் பார்த்துப் பயந்துபோன பிள்ளைகள் பள்ளியை விட்டே ஓடிப்போயினர். மற்றொரு கிராமத்தில் பெண்களும், சிறுவர்களும் நடுநடுங்கிப் பல்வேறு திசைகளிலும் ஓடி ஒளிந்துகொண்டனர்.



பல்லக்கில் பயணிக்கும் ரேனியஸ்

இவ்வாண்டின் இறுதியில் ரேனியசுடன் பணியாற்ற, ஜெர்மனியர் அருள்திரு. B.ஷ்மிட் (Schmid) வந்து சேர்ந்தார். பணியின் பாரம் ஓரளவு குறைந்தது. எனவே இவரால் வந்தவாசி, பல்மனேர் போன்ற இடங்களுக்குப் போய் வருவது சாத்தியமாயிற்று. இவ்வாறு சென்ற

போதெல்லாம் சமண மதத்தைத் தழுவிய பலரைச் சந்தித்தார். அவர்களின் சமயத்தைக் குறித்து அறிந்துகொள்வதில் ஆர்வம் காட்டினார். இவருடன் அப்பாவு என்னும் உடன் ஊழியர் செல்வது வழக்கம். அப்பாவு, காலரா நோய்க்குப் பலியானபோது, ரேனியஸ் அடைந்த துன்பம் கொஞ்சமல்ல.

ரேனியஸ் பயணம் செய்யும்போது, சிலவேளைகளில் பல்லக்கிலும் செல்லுவார். மழை நாட்களில் இரவுப்பொழுதைப் பல்லக்கிலேயே உறங்கிக் கழிப்பார். சில நகரங்களில் கிழக்கிந்தியக் கம்பெனி ஆயரின் இல்லத்திலோ அல்லது கம்பெனி அலுவலரின் இல்லத்திலோ தங்கிக்கொள்வார். இந்துக்கள் தங்கள் வீடுகளுக்குள் நுழைய இவரை அனுமதிக்கவில்லை. அந்தச் சமயங்களில் திறந்த வெளியிலோ அல்லது பல்லக்கிலோ இரவுப்பொழுதைக் கழிப்பார். மாட்டுக்கொட்டகையிலும் ஓரிரவை மகிழ்ச்சியோடு கழித்தார் எனத் தமது நாள் குறிப்பில் எழுதியிருக்கிறார்.

## ரேனியஸ் - திருமறை மொழிபெயர்ப்பாளர்

1715 - ல் சீகன்பால்க் தான் தமிழ் மொழியாக்கம் செய்த புதிய ஏற்பாட்டை வெளியிட்டார். அந்த மொழிபெயர்ப்பைப் பெப்ரீசியஸ் திருத்தினார். நூறாண்டுகட்குப் பிறகே, 1815 - ல்தான் கல்கத்தா வேதாகமச் சங்கம் பெப்ரீசியஸ் மொழிபெயர்ப்பைத் திருத்த முடிவு செய்தது. ரேனியஸ் இந்தியாவிற்கு வந்து 18 மாதங்கள் ஆகியிருந்தது. இருந்தபோதிலும் பெப்ரீசியஸ் மொழிபெயர்ப்பைத் திருத்த உதவிடுமாறு, ரேனியசை வேதாகமச் சங்கம் வேண்டிக்கொண்டது. அவர் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். தமிழாசிரியர் ஒருவர் உதவியுடன், மொழிபெயர்ப்பைத் திருத்தும் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

ரேனியஸ் தமது பயணங்களின்போதெல்லாம் அநேக இந்துக்களைச் சந்தித்து உரையாடினார். திருமறை எழுதப்பட்டிருந்த தமிழ் நடை விளங்கிக் கொள்வது, தமிழர்களாகிய அவர்களுக்கே கடினமாக இருந்தது. வார்த்தைகளையும் சொற்றொடர்களையும், மரபுச் சொற்களையும் மொழியாக்கம் செய்வதில் எவ்வளவு கவனம் தேவை என்பதை ஒரு பிராமணருடன் கலந்துரையாடினபோது தெரிந்துகொண்டார். அவர்கள் மத்தேயு நற்செய்தி நூல் மூன்றாம்

அதிகாரம் ஏழாம் வாக்கியமாகிய: ‘விரியன் பாம்புக் குட்டிகளே’ என்பது குறித்து விவாதம் செய்தனர். அந்தப் பிராமணர் வார்த்தைக்கு வார்த்தை பொருள் கொண்டதால் மக்கள் விரியன் பாம்புகளாகவே மாறினார்கள் என்று நினைத்தார். இந்த அனுபவம் ரேனியசுக்குப் புலப்படுத்தின உண்மை யாதெனில், திருத்தம் மட்டும் போதாது, ஒரு புதிய மொழி பெயர்ப்பே அவசியம் என்பதாகும். எனவே திருமறையை மொழியாக்கம் செய்யத் தொடங்கினார். வாழ்நாள் முழுவதும் தொடர்ந்து செய்ய வேண்டிய பணியாக அது மாறியது. முதற் கட்டமாக, புதிய ஏற்பாட்டை மொழியாக்கம் செய்து முடித்தார். தமது 48-ஆம் வயதில் இறந்தபோது, பழைய ஏற்பாட்டு மொழியாக்கம், நிறைவு பெறாமலிருந்தது.

ரேனியசின் இந்து நண்பர்கள், இவருடைய மொழிபெயர்ப்பு விளங்கிக்கொள்வதற்கு எளிதாய் இருப்பதாகக் கூறினர். ஆனால் இவருடன் பணியாற்றிய கிறிஸ்தவ ஊழியர்களோ இவரது மொழி பெயர்ப்பை விரும்பவில்லை. ரேனியஸ் வருத்தப்பட்டார். திருமறை மொழியாக்கத்தின் அடிப்படையான கருத்துக்களை அவர்கள் அறியாதிருந்தனரென்பது தெளிவாயிற்று. எனவே மொழியாக்கத்தின் அடிப்படை யாது என்பதனை அவர் தெளிவாய் எழுதி வைத்தார். அவர் எழுதியதை அப்போது யாரும் ஏற்றுக்கொள்ளவில்லை. ஆனால் தற்காலத்தில் வேதாகமச் சங்கம் பயன்படுத்தும் திருமறை மொழி பெயர்ப்பின் அடிப்படைக் கோட்பாடுகட்கும், ரேனியஸ் எழுதி வைத்தவற்றிற்கும் வேறுபாடுகள் இல்லை. அவர் இக்காலத்திற்குரியவரென்று எண்ணத்தோன்றுகிறதல்லவா?

1817- ஆம் ஆண்டு நவம்பர் மாதம் ஐந்தாம் நாளில் புராட்டஸ்டண்ட் சபையார், உரோமன் கத்தோலிக்கர், இந்துக்கள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று சென்னையில் கூடியது. தமிழ் வேதாகமக் கழகத்தை அவர்கள் தோற்றுவித்தனர். இக்குழுவின் உயிர்நாடியாக இருந்தவர் ரேனியஸ் என்று சொன்னால் அது மிகையாகாது.

# திருமறையை தெரிந்துகொள்வோம்

நியாயாதிபதிகள்

அன்புக்குரியவர்களே இந்த மாதத்திற்கான வினாக்கள் நியாயாதிபதிகள் புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டுள்ளன, இதற்கான பதில்களை இந்த மாதம் 15 ஆம் தேதிக்குள் ஆயருக்கு tamilchurchcsisharjah@gmail.com என்னும் மின்னஞ்சல் வழியாகவும் அல்லது 0507032150 Whatsapp வழியாகவும் அனுப்புமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

1. என் மக்கள் அவர் அவர் தங்கள் பார்வைக்கு சரிப்போனபடி செய்தனர் ?
2. சோரோக் ஆற்றங்கரையில் இருந்த பெண் யார்?
3. லாயீஸின் புதிய பெயர்?
4. சிபோலேத் என்று சொல்பவர்க்கு என்ன நடக்கும்?
5. நாய் நக்கும் பிரகாரமாக நக்கிக்கொண்டவர் லக்கம் ?
6. எங்கு பெருவிரல்கள் தறித்துப் போட்டார்கள்?
7. லூஸ் மறுபெயர் என்ன?
8. கீரியாதஅர்பாவின் புதிய பெயர்?
9. எத்தனை நரிகள் பிடிக்கபட்டது?
10. எத்தனை நாட்களுக்குள் விடுகதைக்கு பதிலாளிக்க வேண்டும்?
11. எத்தனை இடதுகை வாக்கானர் இருந்தார்கள்?
12. யார் தலையின் மேல் எந்திரக்கல்லின் துண்டு போடப்பட்டது ?
13. எந்த வானத்தின் பொருள் சிசெராவோடே யுத்தம்பண்ணியது?
14. யார் தாற்றுக்கோலால் 600 பேரை முறியடித்தான்?
15. யார் ஸ்தூலித்த மனுஷனாயிருந்தான்?
16. 40 குமாரர், 30 பேரப்பிள்ளைகள் கொண்ட நியாயாதிபதி யார்?
17. கிதியோனின் தந்தை யார்?
18. மூப்பது குமாரர் கொண்ட நியாயாதிபதி யார்?
19. லபிதோத்தின் மனைவி யார்?
20. காலேபின் தம்பி யார்?



## கடந்த மாத வினாக்களுக்கான பதில்கள்

1. எழு (4:5)
2. எழு (5:1)
3. சாட்சிகள், இரண்டு (11:3)
4. முத்திரை உடைக்கும் போது (6:1)
5. சாவு (6:8),
6. சாவு பாதாளமும் (20:14)
7. சாத்தான் (20:7)
8. 7 வாதை (15:1)
9. தேவாலயம் இல்லை (21:22)
10. விருந்துக்கு கூடி வாருங்கள் (19:17)
11. மாதம் ஒரு முறை (22:2)
12. ஐபிராத் (16:12)
13. ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு எதுவானவைகள் (22:2)
14. தீர்க்கதரிசன வசனங்களை முத்திரைபோட வேண்டாம் (22:10)
15. யேசபேல் (2:20)
16. தராசு (6:5)
17. பில்தெல்பியா (3:11)
18. 24 மூப்பர்கள் (4:10)
19. கழுகு (8:13)
20. பாதாளத்தின் தூதன் (19: 11)

கடந்த மாதம் கேள்விகளுக்குப் பதிலளித்த அனைவருக்கும் பாராட்டினையும் நன்றியையும் தெரிவித்துகொள்கிறோம்.

1. Mrs.Kavitha Johnsaon
2. Mrs.Florence Anantharaj
3. Mrs.Punitha Arul
4. Mrs.Princy Beulah Prasanth
5. Mr.Babu
6. Dr. Jone Bino
7. Mrs.I.Stella
8. Mrs.Ahiya Jacob
9. Mrs.Ruby Jeyaseelan

**Children's Corner - Colouring**

1. Jefin
2. Jafan
3. A.Achsah Davina
4. A.Achash Jeshua
5. A.Adriel Joshua
6. Prayton Harold Prasanth

# Kids Corner

# His New Beginning

***"Sometimes we feel sad, scared, or unsure–but God always helps us start again!"***

*When something goes wrong or we make a mistake, God does not turn away. He loves us, forgives us, and holds our hand. The Bible shows us that God is a God of new beginnings. With Him, every day can begin with joy and hope !*



### Noah – A Fresh Start for the World

*Long ago, the world was filled with bad choices, but Noah loved God and listened to Him. God kept Noah and his family safe inside the ark while the rain covered the earth. When the storm ended, God gave them a brand-new beginning. He placed a beautiful rainbow in the sky to remind everyone of His promise and hope. Read: Genesis 9:13*

### Joseph – God Turned Pain into Purpose

*Joseph was treated unfairly and sent far away from his family. Even in prison, God stayed close to him and did not forget him. At the right time, God lifted Joseph up and gave him a great place of honor. God used Joseph's hard days to save many people from hunger. Read: Genesis 45:5*





### Jonah – God Gave Another Chance

*God asked Jonah to go to a city and share His message, but Jonah ran away. God loved Jonah too much to leave him there. After Jonah prayed, God spoke to him again with kindness and patience. Jonah obeyed this time, showing that God gives second chances. Read: Jonah 3:1*

### Peter – Forgiven and Restored

*Peter loved Jesus, but when he was scared, he said he did not know Him. Jesus did not shout or turn away from Peter. Instead, Jesus forgave him and trusted him again. Peter became strong and brave, sharing God's love with many people. Read: John 21:17*



### FOR US TODAY

*God still gives new beginnings. He forgives, restores, and strengthens us. With Jesus, every day can start again.*

**Memory Verse :**

Therefore if any man be in Christ, he is a new creature: old things are passed away; behold, all things are become new. 2 Corinthians 5:17





*Now you have read the Bible Stories about God's new beginnings.*
*Let's see how much you remember ?*

# QUIZ : HIS NEW BEGINNING

1. What does God give us when things go wrong?
a) Punishment
b) A new beginning
c) Nothing

2. Who did God save through the flood?
a) Moses
b) Noah and his family
c) Jonah



3. What sign did God place in the sky for Noah?
a) A star
b) A cloud
c) A rainbow

4. Where was Joseph before God lifted him up?
a) In a palace
b) In prison
c) In a ship



5. Who ran away from God but was given another chance?
a) Peter
b) Jonah
c) David

6. What did Jesus do when Peter denied Him?
a) Ignored him
b) Punished him
c) Forgave him

7. Complete the verse: "If anyone is in Christ, he is a ______ creation."
a) Small
b) New
c) Old

Don't forget to send your answers to Pastor Uncle by the 15th of this Month.
+971 50 703 2150

*Contributed by*
**Sathish Rajkumar**

# Birthday & Wedding day Celebrants

**1st Jan**
MR. PREM TITUS S.
**2nd Jan**
MR. SELWYN ABRAHAM.M
MASTER. ADRIEL JOSHUA
MRS. SUSAN PRAVEENA
**4th Jan**
MRS. SUMITHA SOLOMON
MASTER. ALPHINE JUDHA
**5th Jan**
MISS. HEANNY GRACE
**6th Jan**
MISS. JEFFY ANDREA ELIZABETH
MISS. PRINCY
**7th Jan**
MISS. MIRACLIN JEBA
**9th Jan**
MRS. SHEEBA JEYAKUMAR
MR. ALEX THAMBIRAJ
MISS. JUWENA STEFFI
**10th Jan**
MR. RAVI SELVAN K.
MASTER. RICHARD OLIVER BRAIN
**11th Jan**
MRS. ANITA JENCY
**12th Jan**
MR. MANOJ ABRAHAM
MRS. DEEPA JASPER
**13th Jan**
MR. KINGSTON V.
MR. THANASEKAR
**14th Jan**
MASTER. RICKY ABNER.P
MRS. PRAVEENA PRATHAP
MR. STALIN DAVID
**15th Jan**
MISS. RENI KOIL RAJ
MASTER. SHAUN DAVIS
**16th Jan**
MR. SURESH PITCHAIMANI G.
**17th Jan**
MRS. D.LISSY
MRS. RACHEL RICH DARLING
**18th Jan**
MRS. JUICEY NIRMALA
**19th Jan**
MRS. DEEPA VIJAYANAND
MISS. MICHELLE JESSICA M
MISS. JERRISA
MASTER. JERRICK
**20th Jan**
MRS. JENEFA GNANAMANI
MASTER. RUBAN
**21st Jan**
MR. LIGHTEN DILIP
MASTER. NEEL ISSAC.N
MASTER. GEOFFIN
**22nd Jan**
MASTER. LEWIN JERALD
**23rd Jan**
MRS. DIVINA ROSY GRACE
MRS. FREEDA
**24th Jan**
MRS. DIVYA ANGELINE PHILIP
MISS. JOYCE RACHEL
**25th Jan**
MRS. JANSI.R
**26th Jan**
MR. KOILPITCHAI T.
**27th Jan**
MRS. GNANA SELVI
MASTER. ANRIYD BENZION
**29th Jan**
MISS. CAREN JAFFICE
**30th Jan**
MASTER. ARRON LORDSON V.
MISS. LYRIN NILAVATHANI
**31st Jan**
MR. SURESH BABU P.
MRS. JAYALAXMI
MASTER. PRINCE

## Wedding Anniversary

**3$^{rd}$ Jan**
MR. DANIEL FRANK RAJKUMAR.T & MRS. PRIYA DANIEL

**4$^{th}$ Jan**
MR. SAM NAVEEN KUMAR & MRS. RENEE CHRISTIAN RAVEEENDRAN

**5$^{th}$ Jan**
MR. PETER VETHANAYAGAM & MRS. VIJAYANTHA VETHANAYAGAM

**9$^{th}$ Jan**
MR. MOHANDAS SATHIYARAJ & MRS. SUBITHA MOHAN

**12$^{th}$ Jan**
MR. SHYLANDER VASANTH KUMAR & MRS. HANNAH SUMITHA

**17$^{th}$ Jan**
MR. A. MOSES ARULDOSS & MRS. A. MARIA

**18$^{th}$ Jan**
MR. LIGHTEN DILIP & MRS. PRIYA DARSINI LIGHTEN
MR. SAM ALLWIN
MR. RUBAN NALLATHAMBY & MRS. ANITA JENCY

**21$^{st}$ Jan**
MR. JASPER JOHN PAUL P. & MRS. DEEPA JASPER
MR. J.JOHNSON PRABU & MRS. J.THUKILAJA

**22$^{th}$ Jan**
MR. SHYAM BABU & MRS. SINDUJA

**23$^{rd}$ Jan**
MR. MAHESH MICHAEL RAJ & MRS. DIVINA ROSY GRACE
MR. T.THOMAS RAJA & MRS. ESTHER GEETHA

**24$^{th}$ Jan**
MR. JABIN RAJ.S & MRS. PUSHPALATHA LATHA

**25$^{th}$ Jan**
MR. WINSTON SURESH & MRS. ANDREA KLEMMY

**26$^{th}$ Jan**
MR. ARULANANDH C. & MRS. PUNITHA

**27$^{th}$ Jan**
MR. JOHN CHITTY BABU G. & MRS. SELVI J.
MR. ROSELIN SOBITHAM & MRS. SURESH GANESAN

**28$^{th}$ Jan**
MR. ANBU SUNDAR RAJ & MRS. FREEDA

**30$^{th}$ Jan**
MR. MESSIAH A.S.K & MRS. BERYL JENEFA

# DAILY BIBLE READING JANUARY - 2026

| Day | Morning | Evening |
|---|---|---|
| 01 Thu | 1 இராஜாக்கள் 19:15-21 | மத்தேயு 11:25-30 |
| 02 Fri | எஸ்தர் 1:1-22 | எபேசியர் 1:1-23 |
| 03 Sat | எஸ்தர் 2:1-18 | எபேசியர் 2:1-22 |
| 04 Sun | எசாயா 45:18-25 | மத்தேயு 2:1-12 |
| 05 Mon | எஸ்தர் 2:19, 3:11 | எபேசியர் 3:1-21 |
| 06 Tue | எஸ்தர் 3:12, 4:8 | எபேசியர் 4:1-32 |
| 07 Wed | எஸ்தர் 4:9, 5:8 | எபேசியர் 5:1-33 |
| 08 Thu | எஸ்தர் 5:9, 6:14 | எபேசியர் 6:1-24 |
| 09 Fri | எஸ்தர் 7:1, 8:8 | கலாத்தியர் 5:1-6 |
| 10 Sat | எஸ்தர் 8:9-17 | அப்போஸ்தலர் 19:1-7 |
| 11 Sun | யாத்திரகமம் 3:1-15 | கலாத்தியர் 4:1-7 |
| 12 Mon | எஸ்தர் 9:1-10 | 1 திமோத்தேயு 3:1-13 |
| 13 Tue | எஸ்தர் 9:11-18 | 1 திமோத்தேயு 3:14, 4:5 |
| 14 Wed | எஸ்தர் 9:19, 10:3 | 1 திமோத்தேயு 4:6-16 |
| 15 Thu | ஆமோஸ் 1:1-10 | 1 திமோத்தேயு 5:1-16 |
| 16 Fri | ஆமோஸ் 1:11, 2:5 | 1 திமோத்தேயு 5:17, 6:2 |
| 17 Sat | ஆமோஸ் 2:6-16 | 1 திமோத்தேயு 6:3-16 |
| 18 Sun | தானியேல் 1:8-21 | கொலோசெயர் 3:1-11 |
| 19 Mon | ஆமோஸ் 3:1-15 | தீத்து 1:1-16 |
| 20 Tue | ஆமோஸ் 4:1-13 | தீத்து 2:1-15 |
| 21 Wed | ஆமோஸ் 5:1-17 | தீத்து 3:1-11 |
| 22 Thu | ஆமோஸ் 5:18, 6:7 | யோவான் 1:1-18 |
| 23 Fri | ஆமோஸ் 6:8, 7:6 | யோவான் 1:19-34 |
| 24 Sat | ஆமோஸ் 7:7, 8:8 | யோவான் 1:35-51 |
| 25 Sun | நெகேமியா 2: 11-18 | யோவான் 2:1-25 |
| 26 Mon | ஆமோஸ் 8:9, 9:6 | யோவான் 3:1-21 |
| 27 Tue | ஆமோஸ் 9:7-15 | யோவான் 3:22-36 |
| 28 Wed | யோனா 1:1-9 | யோவான் 4:1-21 |
| 29 Thu | யோனா 1:10, 2:10 | யோவான் 4:22-42 |
| 30 Fri | யோனா 3:1, 4:11 | யோவான் 4:43, 5:9 |
| 31 Sat | ஒபதியா 1:1-10 | யோவான் 5:10-29 |

# வழிபாட்டு தியானப் பொருள்
## ஜனவரி-2026

| நாள் | திருமறைபாடம் | | தியானப்பொருள் |
|---|---|---|---|
| ஞாயிறு Jan-4 2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | ஆதியாகமம் 12 : 1-7<br>ரோமர் 8 : 31-39<br>யோவான் 15 : 9-17<br>சங்கீதம் 136 | 2nd Sunday after Christmas<br>கடவுளின் அன்பை அனைவருக்கும் வெளிப்படுத்துதல்<br>Unveiling God's Love to All |
| ஞாயிறு Jan-11 2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யாத்திரகமம் 3 : 1-15<br>கலாத்தியர் 4 : 1-7<br>மத்தேயு 3 : 11-17<br>சங்கீதம் 98 | 1st Sunday after Epiphany<br>இயேசுவின் திருமுழுக்கு : அடையாளத்தின் உறுதியும் அருட்பணியும்<br>Baptism of Jesus : Affirmation of identity and Mission |
| ஞாயிறு Jan-18 2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | தானியேல் 1 : 8-21<br>கொலேசியர் 3 : 1-11<br>மாற்கு 5 : 1-21<br>சங்கீதம் 1 | 2nd Sunday after Epiphany<br>Temperance Sunday / Deaddiction Sunday<br>கட்டவிழ்த்தல் : தீய பழக்கத்திலிருந்து விடுதலை<br>Break the Chain : Finding Freedom from Addictions |
| ஞாயிறு Jan-25 2026 | பழைய ஏற்பாடு<br>நிருபப் பாடம்<br>நற்செய்திப் பாடம்<br>சங்கீதம் | யோசுவா 4 : 1-11<br>அப்போஸ்தலர் 4 : 32-37<br>மாற்கு 6 : 32-44<br>சங்கீதம் 67 | 23rd Sunday after Epiphany<br>Ecumenical Sunday<br>பற்றுறுதியிலும் செயல்பாட்டிலும் ஒன்றிப்பு<br>Unity in Faith and Action |

